ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/21 - 2025 ජූලි මස 01 වැනි අඟහරුවාදා - 2025.07.01

*2443/21 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 262ஆம் அத்தியாயத்தின் 66இ(4) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஹேரத் முதியன்சலாகே சஞ்சீவனி ஹேரத் ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66இ(4) ஆம் உபபிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள இங்கு கீழ், காட்டப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்காக தலைவர் / உப தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுக்கும் பணிக்கான கூட்டம் கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திகதிகளில் உரிய நேரங்களில் இங்கு காட்டப்பட்டுள்ள இடங்களுக்கு அழைக்கப்படுவது பற்றி இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**எச்.எம். சஞ்சீவனி ஹேரத்,**
உள்ளூராட்சி ஆணையாளர்,
வடமேல் மாகாணம்.

வடமேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்,
2 ஆவது மாடி, விதுசர, மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி,
குருநாகல்,
2025, யூலை 01.

1A - PG 7185— 05 (2025/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *தொடர் இல.* | *மாவட்டம்* | *உள்ளூர் அதிகார சபையின் பெயர்* | *தேர்ந்தெடுக் கப்படும் பதவி* | *அழைக்கப்படு கின்ற திகதி* | *அழைக்கப் படுகின்ற நேரம்* | *அழைக்கப்படுகின்ற இடம்* |
|---|---|---|---|---|---|---|
| 1 | குருநாகல் | மாவத்தகம பிரதேச சபை | தலைவர்/ உப தலைவர் | 2025.07.14 | மு.ப. 9.00 மணி | பிரதேச சபை கேட்போர்கூடம், மாவத்தகம பிரதேச சபை, மாவத்தகம. |
| 2 | புத்தளம் | ஆனமடுவ பிரதேச சபை | தலைவர்/ உப தலைவர் | 2025.07.15 | மு.ப. 9.30 மணி | பிரதேச சபை கேட்போர்கூடம், ஆனமடுவ பிரதேச சபை, ஆனமடுவ. |
| 3 | புத்தளம் | ஆராச்சிக்கட்டு பிரதேச சபை | தலைவர்/ உப தலைவர் | 2025.07.15 | பி.ப. 2.00 மணி | ஆராச்சிக்கட்டு பிரதேச சபை, பிரதேச சபை கேட்போர்கூடம், ஆராச்சிக்கட்டு. |

EOG 07-0017

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.